1983 பிப்ரவரி 11]

கொடுக்கும் கடன்களை ஐ.டி.பி.ஐ. ரிபைனான்ஸ் செய்கிறது. ஆனால் ஒட்டு மொத்தமாக எல்லா தொழிற்சாலைகளிலும் செகண்ட் ஹேண்ட் மெஷின்களை உபயோகப்படுத்தக் கூடாது என்று ஐ.டி.பி.ஐ. நிறுவனம் முடிவெடுத்திருக்கிறது. ஆனால் நூற்பாலைகளுக்கு உபயோகப்படுகிற இந்த மஷின்களுக்கு மட்டும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல செகண்ட் ஹேண்ட் மெஷினை உபயோகப்படுத்த முடியுமா என்பது குறித்து, அதனுடைய தரம் எவ்வளவு ஆண்டுக்கு முன் வாங்கப்பட்டது, எவ்வளவு நாட்கள் பயன்படுத்தப்பட்டது, இன்னும் எவ்வளவு ஆண்டுகள் ரிப்பேர் ஆகாமல் உபயோகப்படுத்த முடியும். அப்படி செகண்ட் ஹாண்ட் மிஷின் போடுவதன் மூலம் ப்ராஜக்ட் காஸ்ட் எவ்வளவாகும், புது மிஷினுக்கும் பழைய மிஷினுக்கும் உள்ள டிஃபரன்ஸ் எவ்வளவு என்பதைப்பற்றி எல்லாம் ஆய்ந்த பிறகுதான் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் அதனை ஆய்வு செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, இந்தத் தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக ஒரு சில தொழில்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் மருத்துவத் தொழிலைச் செய்கின்ற மருத்துவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் ஏதாவது கடன்கள் வழங்க அரசு ஆலோசனை செய்திருக்கின்றதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் தொழிலுக்கு பொதுவாக டிஸ்பென்சரி கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒருசில பேர் மனு செய்திருந்ததாகத் தெரிகிறது. ஆனால் ஒரு தொழில் என்ற வரம்புக்குள்ளே டிஸ்பென்சரி கட்டிடம் கட்டுவது வரவில்லை, எனவே ஐ. டீ. பீ. எல். நிறுவனம் அதற்கு ரீஃபைனான்ஸ் கொடுப்பதில்லை. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமும் அதற்குக் கடன் வழங்குவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தொழில் நுட்ப ஆலோசனை நிறுவனம் ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண். 237—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழில்துறையில் தகுந்த தொழில் நுணுக்க ஆலோசனை வழங்குவதற்கான நிலையம் ஒன்று நிறுவும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு மதிப்பீடு, எப்பொழுது செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு தொழில் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனை நிறுவனம் என்ற நிறுவனம் ரூ. 10 இலட்சம் மூலதனத்தில் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மற்றைய நிறுவனங்களுடன் சேர்ந்து தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாட்டு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆகியவை மூலதனப்பங்கு கொண்டுள்ளன. தமிழக அரசு நேரிடையாக எந்தப் பங்கும் பெறவில்லை. ஆனால் தமிழக அரசினுடைய கார்ப்பரேஷன் நிறுவனங்கள் இதிலே இடம் பெற்றிருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் அதிபர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கிய தொழில் நுட்ப ஆலோசனைக் குழு நிறுவப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். எப்போது அந்த ஆலோசனைக் குழு அமைக்கப்படும், அதில் யார் யார் உறுப்பினர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி இண்டஸ்ட்ரியல் டெக்னிக்கல் அண்ட் கன்சல்டன்சி ஆர்கனைசேஷன் பற்றியது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இப்போது அட்வைசரி போர்ட் பற்றிக் கேட்கிறார்கள். தொழில் துறையின் மானியக் கோரிக்கை வருகின்றபோது மாநில அளவிலே ஒரு தொழில் ஆலோசனைக் குழு அதாவது ஸ்டேட் லெவல் அட்வைசரி கமிட்டி அமைக்கப்பட இருக்கின்றது. அதிலே 40 முதல் 45 வரை தொழில் வல்லுநர்களும் தொழில் அதிபர்களும் இடம் பெறுவார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடம் இருக்காது. அவர்கள் தங்களுடைய மேலான ஆலோசனையை இந்த மாமன்றத்திலேயே எடுத்து வைக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, தமிழகத்தைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானிகள், டாக்டர்கள், இன்ஜினியர்கள் போன்றவர்கள் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்குப் போய் அங்கே புது கண்டுபிடிப்புகளையும் சாதனைகளையும் நிகழ்த்துகிறார்கள். அவர்களை எல்லாம் இங்கே வரவழைத்து நல்ல சம்பளம் கொடுத்து அவர்களிடத்திலிருந்து தொழில் நுட்ப ஆலோசனையைப் பெற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி யாராவது அங்கே இருந்து இங்கே வர முன் வருவார்களேயானால் அப்படிப்பட்ட ஏதாவது வேண்டுகோள் வந்தால் அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1983 பிப்ரவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 238, 239 240 241 ஆகியவை மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்பெறுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் சிமெண்ட் விலை 100 ரூபாய்க்கு மேலே போய் இருக்கின்றது. அது குறித்து 54-வது விதியின் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எல்லாம் வராது. இன்றைக்கு அரிசியே கிடைக்கவில்லை, சிமெண்ட் இல்லை என்றால் 10 நாட்கள் கழித்துக் கூட கட்டிடத்தைக் கட்டிக் கொள்ளலாம்.

(முற்பகல் 10·20)

திரு இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் ஒரு ஆலயத்தில் ஒரு காவலர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் அது குறித்து.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறைப்படி கொடுத்திருந்தால் வரும்.

4 உரிமைப் பிரச்சினை

ஆளுநர் உரை மூலம் பேரவைக்கு தவறான தகவல் அளிக்க முயற்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 9—2—1983 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் பேரவையில் 246-ம் விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்ப என் அனுமதி கேட்டு அதற்கான விளக்கமும் அளித்தார். மாண்புமிகு பேரவை முன்னவர் விளக்கம் அளித்தபின், எனது தீர்ப்பு பின்னர் அறிவிக்கப்படும் என்று நான் கூறியிருந்தேன்.